தேதி.28.08.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 10/2020 திரு.பழனிச்சாமி, த/பெ. ராமணகவுண்டர் வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு என்ன வயது என்றால் 88 ஆகும். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் செண்பகப்புதூரில் குடியிருக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கின் பிராதுவில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 15.03.2018ம் தேதியில் பணம் கொடுத்தேன். கிழமை தெரியுமா என்றால் தற்போது நினைவில் இல்லை. பிரதிவாதி செல்வராஜ் எங்கு வேலை செய்கிறார் என்றால் மின்சாரத்துறையில் வேலை செய்து வந்தார். தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். அவருடைய சம்பளம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்தேன் என்றால் நான்கு லட்ச ரூபாய் கடன் கொடுத்தேன். மேற்படி பணம் எனக்கு எப்படி வந்தது என்றால் எனது மாமனார் மனைவிக்கு கொடுத்த சொத்தை விற்ற வகையில் காசு வைத்திருந்தேன். மேற்சொன்ன விவரத்தை நான் எனது பிராதுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கடனுறுதி சீட்டு எத்தனை கொடுத்தார் என்றால் ஒரு பாண்டு கொடுத்தார். அதில் செல்வராஜ் இரண்டு கையெழுத்து செய்தார். கைரேகை வைக்கவில்லை. செல்வராஜ் கையெழுத்திட்ட பேணாவின் மை நிறம் தெரியுமா என்றால் இல்லை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் பணம் வட்டிக்கு விடுவேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு மட்டும் தான் வட்டிக்கு கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும்போது உடன் யார் இருந்தார்கள் என்றால் எங்களுடன் என் மனைவி மற்றும் சாட்சிக்காரர் ஒருவர் இருந்தார். பணத்தை நான் கொடுத்தேனா அல்லது எனது மனைவி கொடுத்தாரா என்றால் என் மனைவியிடமிருந்து வாங்கி நான் தான் கொடுத்தேன். அதை என் மனைவி பார்த்தார். சாட்சியாக என் மனைவியை சேர்க்கவில்லை என்றால் அப்போது தோன்றவில்லை. எனது மாமனார் எனது மனைவிக்கு கொடுத்த சொத்து எங்கு உள்ளது என்றால் எங்கு

உள்ளது என்று தெரியாது.  எனது மாமனார் காடு எதுவும் விற்கவில்லை என்றும், என் மனைவிக்கு கொடுக்கவில்லை என்றும், நான் அந்த பணத்தை பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.  தாவா கடனுறுதி சீட்டை யார் வாங்கி வந்தார்கள் என்றால்  பிரதிவாதியே வாங்கி வந்தார்.  எதற்காக கடன் வாங்கினார் என்று பிரதிவாதி சொன்னாரா என்றால் கிணறு வெட்டுவதற்காகவும், இடத்தை வாங்குவதற்காகவும் என்று சொல்லி வாங்கினார்.  பிரதிவாதிக்கு பூமியே இல்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி இருபது லட்ச ரூபாய்க்கு விற்றுள்ளார். எவ்வாறு பிரதிவாதி இருபது லட்ச ரூபாய்க்கு விற்றார் என்று எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் இடத்தை வாங்கியவர் என்னிடம் தெரிவித்தார்.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.